# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF Prl. DISTRICT AND SESSIONS JUDGE
KANYAKUMARI AT NAGERCOIL

Calendar
Miscellaneous
Preliminary Register
Session Case S.C.No. 21/2024
Prosecution Witness -P.W. 5

Deposition of witness for Prosecution

| | | |
|---|---|---|
| Name | : | திரு. வினு |
| Father's Name | : | Murugan |
| Village | : | Manakadu |
| Taluk | : | Attukal |
| Caste | : | Vishwakarma |
| Calling | : | Crane Driver |
| Religion | : | Hindu |
| Age | : | 26 |
| Date | : | 12.06.2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 12.06.2024.

(எதிரி இன்று நீதிமன்றத்தில் ஆஜர். )

<u>12.06.2024</u>

<u>முதல் விசாரணை :-</u>

நான் தற்போது திருவனந்தபுரத்தில் குடியிருந்து வருகிறேன். 28.08.2023 அன்று எனது அத்தை உமா அவருடைய மகன் மனோஜ் மருத்துவமனையில் இறந்து விட்டான் என இரவு 9.30 மணியளவில் சொன்னார். நானும், அப்பாவும் திருவனந்தபுரத்திலிருந்து பஸ் ஏறி நாகர்கோவில் வந்தோம். அங்கிருந்து வெட்டூர்ணிமடம் சத்திய மருத்துவமனைக்கு ஆட்டோவில் சென்றோம். மனோஜின் பிரேதம் ICU வில் இருந்தது பார்த்துவிட்டு அங்கே இருந்தோம். மறுநாள் காலை 2.00 மணிக்கு காவல் ஆய்வாளர்

வந்தார். பிரேதத்தை அடையாளம் காண்பிக்க சொன்னார். நானும், அப்பாவும் பிரேதத்தை அடையாளம் காட்டினோம். ஏதோ பேப்பரில் எழுதி 3.45 மணியளவில் அதை வாசித்து காண்பித்தார். மனோஜ் அணிந்திருந்த நீலக் கலரில் கறுத்த கட்டம் போட்ட சட்டையையும், கறுத்த கலர் ஜீன்ஸ் பேண்டையும் கைப்பற்றினார். நானும், அப்பாவும் காவல் ஆய்வாளர் வாசித்து காட்டிய பேப்பரில் கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் ஆவணம் அந்த பேப்பர் தான். அதில் உள்ள முதல் கையொப்பம் என்னுடைய அப்பாவுடையது, இரண்டாவது கையொப்பம் என்னுடையது. அந்த அத்தாட்சி அ.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. கைப்பற்றப்பட்ட பேண்ட் மற்றும் சட்டையை என்னால் அடையாளம் காட்ட முடியும். என்னிடம் காட்டப்படும் சா.பொ. 4 மற்றும் 5 ம் அந்த உடைகள் தான். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்) :-</u>

நான் திருவனந்தபுரத்திலிருந்து நாகர்கோவில் வந்ததை காண்பிப்பதற்கு பஸ் டிக்கெட்டோ வேறு எதோ ஆவணமோ ஆய்வாளரிடம் கொடுத்தேனா என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் சம்மனில் உள்ள L.W. 8 வினு என்ற பெயருக்கு எதிராக உள்ள கையொப்பம் என்னுடையது அல்ல.

<u>நீதிமன்ற கேள்வி :-</u>

எனக்கு நீதிமன்றத்திலிருந்து சம்மன் எதுவும் சர்வ் ஆகவில்லை. அப்பா எனக்கு போனில் தகவல் சொன்னார். போலீஸ் நிலையத்திலிருந்தும் கூப்பிட்டு சொன்னார்கள். அதன்பேரில் வந்தேன். இன்றைய தினம் கையில் எந்த ஒரு அடையாள அட்டையும் நான் எடுத்து வரவில்லை.

<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி (எதிரி தரப்பில்) :-</u>

நான் வினு என்ற நபரே கிடையாது என்றாலும் நான் ஒரு வழிபோக்கன் என்றாலும் சரியல்ல. நான் இறந்து போன நபருக்கு உறவினர் என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு பற்றி எந்த சங்கதியும் தெரியாது என்றால் சரியல்ல.

என் முன்னர் போலீசார் இந்த வழக்கு சம்பந்தமாக எதுவும் கைப்பற்றவில்லை என்றாலும் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

.